

சேலம் மாவட்டம், ஆத்தூர் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் வேளாண்மை இயந்திரங்கள் பராமரிப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ டாக்டர் இரா. பிருந்தாதேவி முன்னிலையில் 14.05.2025 அன்று சுற்றுலா துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன் தொடங்கி வைத்தார். உடன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், வேளாண் இணை இயக்குநர் ச.சிங்காரம், வேளாண் பொறியியல்துறை செயற்பொறியாளர் குமரன், அட்மா குழு தலைவர் டாக்டர் வே.செழியன் , வருவாய் கோட்டாட்சியர் தா.பிரியதர்ஷினி மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள், விவசாயிகள் உள்ளனர்.

### ப.குணாளன் தலைமை! என் சந்திரன் எம்.சி. – கோல்டு டி. பிரகாஷ் வரவேற்புரை!

# ஆலந்தூர் வடக்குப் பகுதி தி.மு.க. சார்பில் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம்!

## டி.ஆர். பாலு எம்.பி. – ஆர்.எஸ். பாரதி பங்கேற்பு!

## அமைச்சர் தா.மோ. அன்பரசன் – வா.மு.சே. ஆண்டவர் சிறப்புரை!

சென்னை,மே.16

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் வடக்கு பகுதி திமுக சார்பில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு! என்ற தலைப்பில் கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (16.05.2025 வெள்ளிக்கிழமை) மாலை 5 மணிக்கு தர்மராஜா கோவில் தெரு, ஆலந்தூரில் பகுதி செயலாளர் ப. குணாளன் தலைமையில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு பகுதி செயலாளர் என். சந்திரன் எம்.சி., மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ் ஆகியோர் வரவேற்கின்றனர். வே.டில்லி பாபு, கோ. கோடீஸ்வரன், ஐ. அழகேசன், ஜெயா செல்வம், எம்.சையத் அபுதாஹீர், கே.பி. முரளி கிருஷ்ணன், கே. பாபு குமார், ரா. கீர்த்திராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்- அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமை கழக பேச்சாளர் முனைவர் வா.மு.செ. ஆண்டவர் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இதில் கழக பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ். பாரதி, ஆலந்தூர் தொகுதி பொறுப்பாளர் பத்மபிரியா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இதில் எம்.எஸ்.கே இப்ராஹிம், ஆர்.டி. பூபாலன், கீதா ஆனந்தன், இரா. பாஸ்கரன், சாய் ஜெயகாந்த பாரதி, ஆர். ஆர். ஜெயராம் மார்த்தாண்டன், கே.ஆர். ஆனந்தன், கலாநிதி குணாளன், ஜி. சுந்தர்ராஜன், ஆர். பாபு, ஏ.சாலமோன், கே. ராஜேஸ்வரி, இ.ரமேஷ், எம்.ஆர். சீனிவாசன், ஜே.செல்வேந்திரன், டி.ரவி, மா.கோ. கருணாநிதி, பாலகிருஷ்ண மூர்த்தி, ஏ. ஆர்.சரவணன், டி. ஜேசுதாஸ், கே.ஆர். ஜெகதீஸ்வரன், இ.உலகநாதன், நடராஜன், த.மணோகரன், ச. பூவராகவன், பி.திருமாறன், ஜி.ஆர்.வெங்கடேசன், மு.முனியாண்டி, அ.குப்புசாமி, ம.சத்யா, டி.ஜெயக்குமார், பி.செல்வம், மூ.வெள்ளைச்சாமி,

ஜி.வீரராகவன், கோ.பிரபாகரன், என்.பெருமாள், அபிஷேக்கிருஷ்ணா, பி.வேல்முருகன், வி.ரமணா, இ. வெங்கடராமன், கே. வெற்றிவேல், இ.கார்த்திக், சையத்சுலைமான், ஜெ.குமரன், எஸ்.வாசிம் ராஜா, ஆ.தீபக், பி.செல்வகுமார், க.செந்தில்குமார், பால ஆர். விஜயசங்கர், பி.சிவராமன், குருதாயாள் சிங், எஸ்.உதயகுமார், ஆர்.அன்பு எழில், எஸ்.விக்னேஷ், க.சிவராமன், க.சாந்தி, செண்பகவள்ளி, ஜெ.கிரண்புரூஸ், அமுதநாதன், ஏ.உதயகுமார், தி.மு. காமராஜ், கே.கே.சண்முகம், பி.ஜாபர் அலி, ஜெ.அண்ணாதுரை, தங்கம், ஜெ.சசிகுமார், கு.விஜயன், எம்.புரு ஷோத்தமன், வி.பரமதயாளன், எல். ஆரோக்கியராஜ், ஏ.எம்.லட்சுமிபதி,

ஆர்.கோட்டீஸ்வரன், கோ.ராஜ்வேல், ஜெ.சந்துரு, வி.பன்னிர்செல்வம், டி.நாகராஜ், டி.டில்லிபாபு, கே.பி. தினகரன், எஸ்.காஜா மொய்தீன், இ.மு.பாருக், கே.சரவணன், பாபு, தேவேந்திரன், ஏ.பிரபு, என்.தாஸ், கோயில் பாபு, மாமன்ற உறுப்பினர்கள் பி.எம்.பிருந்தாஸ்ரீ, எஸ். ரேணுகா, வி.பாரதி, எஸ். அமுதபிரியா, ஜெ.பூங்கொடி, ஜெ.தேவி, என்.துர்காதேவி, ப.ராஜேஷ், சொ.சஞ்சீவி, ப.சந்தோஷ் , சே.விக்கி, அ. ஜாகீர்உசேன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

இறுதியில் பகுதி இளைஞரணி அமைப்பாளர் கோ. பிரவீன் குமார் நன்றி உரையாற்றுகிறார்.

### நாமக்கல் மாவட்டத்தில்

# ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் 5 புதிய தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையங்கள்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. திறந்து வைத்தார்!

நாமக்கல், மே 16

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம், நாமக்கல் மற்றும் சேந்தமங்கலம் சட்டசபை தொகுதிகளுக்கு உட்பட்ட, வெண்ணந்தூர் ஒன்றியம் பொன்பரப்பிப்பட்டி, ராசிபுரம் ஒன்றியம் கூனவே லம் பட்டி, புதுச்சத்திரம் ஒன்றியம், தாத்தையங்கார்பட்டி, காரைக்குறிச்சி மற்றும் அக்கியம் பட்டி ஆகிய பகுதிகளில், ரூ. 1.20 கோடி மதிப்பில், 5 புதிய தொகுப்பு பால் குளி ரூட்டும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் திறப்பு விழா மாவட்ட ஆட்சியர் மருத்துவர் ச. உமா தலைமையில் நடைபெற்றது.

விழாவில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு பால் குளிரூட்டும் மையங்களை திறந்து வைத்து, 15 சிறந்த பால் உற்பத்தியாளர்களுக்கு பரிசுகளை வழங்கிப் பேசுகையில் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின், 4 ஆண்டுகளில் அனைத்து தரப்பு மக்களுக்கும், அனைத்தும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு திட்டங் களை செயல்படுத்தி வருகின்றார். தற்போது, தனியார் நிறுவனங்களை காட்டிலும், ஆவின் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு நிறுவனம், படிப்படியாக வளர்ச்சி பெற்று வருகிறது.

அதன் அடிப்படையில், நாமக்கல் மாவட்டத்தில் பொன்பரப்பிப்பட்டி, கூனவேலம்பட்டி, தாத்தையங்கார்பட்டி, காரைக்குறிச்சி மற்றும் அக்கியம்பட்டி உள்ளிட்ட 5 இடங்களில் ரூ. 1.20 கோடி ரூபாய் மதிப்பில் 5 இடங்களில், புதிய தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையங்களை திறந்து வைக்கப்பட்டுள்ளது. நாளை மேலும், 3 இடங்களில் புதிய தொகுப்பு பால் குளி ரூட்டும் நிலையங்களை திறந்து வைக்கப் பட உள்ளது.

இதன் மூலம் பால் கொள் முதல் நேரம் அதிகரிக்கும், விவசாயிகள் தங்கள் நேர வசதிக்கு ஏற்ப பாலை சங்கத்தில் வழங்கலாம். இங்கு குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட்டுள்ளதால், பால் குளிரூட்டப்பட்டு பாதுக்காக்கப்படும். இச்சங்கத்தில் பால் கொள்முதல் 2,000 லிட்டர் வரை அதிகரிக்கும். காலை நேரங்களில், 10 மணி வரையும், மாலை 6:00 முதல், இரவு 9:00 மணி வரையும் பாலை சங்கத்தில் வழங்கலாம். இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து, 202425 ஆம் ஆண்டில், அதிகளவில் பால் உற்பத்தி செய்து வழங்கிய, முதல் 3 சிறந்த பால் உற்பத்தியாளர்கள் உள்ளிட்ட மொத்தம் 15 பேருக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் வெண்ணந்தூர் ஒன்றிய கழக செயலாளர்கள் ஆர்.எம்.துரைசாமி, ராசிபுரம் கே.பி.ஜெகநாதன், புதுச்சத்திரம் (வடக்கு) எம்.பி.கௌதம், புதுச்சத்திரம் (தெற்கு) ஆர். ஜெயபிரகாஷ், பிள்ளாநல்லூர் பேரூர் கழக செயலாளர் அ.சுப்பிரமணியம், ஆவின் பொது மேலாளர் சண்முகம், துணை பதிவாளர் சண்முகநதி, உள்ளிட்ட பலர் கலந்து கெண்டனர்.






நாமக்கல் மாவட்டம், ராசிபுரம், நாமக்கல் மற்றும் சேந்தமங்கலம் சட்டசபை தொகுதிகளுக்கு உட்பட்ட, வெண்ணந்தூர் ஒன்றியம் பொன் பரப்பிப்பட்டி, ராசிபுரம் ஒன்றியம் கூனவேலம்பட்டி, புதுச்சத்திரம் ஒன்றியம், தாத்தையங்கார்பட்டி, காரைக்குறிச்சி மற்றும் அக்கியம்பட்டி ஆகிய பகுதிகளில், ரூ. 1.20 கோடி மதிப்பில், 5 புதிய தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையங்களை நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு பால் குளிரூட்டும் மையங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் மருத்துவர் ச. உமா, ஒன்றிய கழக செயலாளர்கள் ஆர்.எம்.துரைசாமி, கே.பி.ஜெகநாதன், எம்.பி.கௌதம், ஆர்.ஜெயபிரகாஷ், பிள்ளாநல்லூர் பேரூர் கழக செயலாளர் அ.சுப்பிரமணியம், ஆவின் பொது மேலாளர் சண்முகம், துணை பதிவாளர் சண்முகநதி, உள்ளிட்ட பலர் கலந்து கெண்டனர்.

### திருப்பத்தூர் மாவட்டம்

# ஆலங்காயம் கிழக்கு, ஆலங்காயம் மத்திய, ஆலங்காயம் மேற்கு - திருப்பத்தூர் கிழக்கு, திருப்பத்தூர் வடக்கு, திருப்பத்தூர் மேற்கு, திருப்பத்தூர் தெற்கு, கந்திலி தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் மற்றும் வாணியம்பாடி கிழக்கு, மேற்கு - ஆம்பூர் மேற்கு, கிழக்கு ஆகிய நகரங்களில் அடங்கியுள்ள வார்டுகள் விவரம் பிரிக்கப்பட்ட ஒன்றிய, நகரக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் – அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் – தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **“தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு”** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் – கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் திருப்பத்தூர் மாவட்டத்திற்குட்பட்ட, ஆலங்காயம் கிழக்கு-மேற்கு, திருப்பத்தூர் கிழக்கு-மேற்கு, கந்திலி தெற்கு ஒன்றியம் ஆகிய 5 ஒன்றியங்கள், **ஆலங்காயம் கிழக்கு, ஆலங்காயம் மத்திய, ஆலங்காயம் மேற்கு – திருப்பத்தூர் கிழக்கு, திருப்பத்தூர் வடக்கு, திருப்பத்தூர் மேற்கு, திருப்பத்தூர் தெற்கு, கந்திலி தெற்கு** ஆகிய 8 ஒன்றியக் கழகங்களாக பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுவதோடு;

வாணியம்பாடி, ஆம்பூர் ஆகிய இரண்டு நகரங்கள் **வாணியம்பாடி கிழக்கு, வாணியம்பாடி மேற்கு – ஆம்பூர் மேற்கு, ஆம்பூர் கிழக்கு** ஆகிய 4 நகரக் கழகங்களாக பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட நகரங்களுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **ஆலங்காயம் கிழக்கு, ஆலங்காயம் மத்திய, ஆலங்காயம் மேற்கு – திருப்பத்தூர் கிழக்கு, திருப்பத்தூர் வடக்கு, திருப்பத்தூர் மேற்கு, திருப்பத்தூர் தெற்கு, கந்திலி தெற்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாகவும் – **வாணியம்பாடி கிழக்கு, வாணியம்பாடி மேற்கு – ஆம்பூர் மேற்கு, ஆம்பூர் கிழக்கு** ஆகிய நகரங்கள் பின்வரும் வார்டுகள் கொண்டதாகவும் அமையும்.

**ஆலங்காயம் கிழக்கு ஒன்றியம்:** 1. பீமகுளம், 2. மரிமாணிகுப்பம், 3.மிட்டூர், 4. பூங்குளம், 5. நரசிங்கபுரம், 6.பெரியகுரும்பத்தெரு, 7.நாய்க்கனூர், 8. ரெட்டியூர் ஆகிய 8 ஊராட்சிகள்.

**ஆலங்காயம் மத்திய ஒன்றியம் :** 1. வெள்ளக்குட்டை, 2.பெத்தவேப்பம்பட்டு, 3. கோவிந்தாபுரம், 4. தேவஸ்தானம், 5.ஜாப்ராபாத், 6. கொத்தக்கோட்டை, 7. விஜிலாபுரம், 8.நெக்னாமலை (பகுதி) பாகம்-1), 9.நிம்மியம்பட்டு, 10.வளையாம்பட்டு, 11. வள்ளிப்பட்டு, 12.ஈச்சங்கால் ஆகிய 12 ஊராட்சிகள் மற்றும் ஆலங்காயம் பேரூர்.

**ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் :** 1. வெலதிகமானிபெண்டா, 2.இளையநகரம், 3. கிரிசமுத்திரம், 4. சம்மந்திக்குப்பம், 5.கொல்லகுப்பம், 6. மதனாஞ்சேரி, 7. பள்ளிப்பட்டு, 8.நெக்னாமலை (புருஷோத்தகுப்பம்) ஆகிய 8 ஊராட்சிகள்.

**திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியம் :** 1. ஆண்டியப்பனூர், 2.இருணாப்பட்டு, 3. குரிசிலாப்பட்டு, 4. பள்ளவள்ளி, 5.பெருமாப்பட்டு ஆகிய 5 ஊராட்சிகள்.

**திருப்பத்தூர் வடக்கு ஒன்றியம் :** 1. அச்சமங்கலம், 2.மேல்அச்சமங்கலம், 3. கதிரிமங்கலம், 4. பூரிகமாணிமிட்டா, 5.அண்ணாண்டப்பட்டி, 6. கருப்பனூர், 7. பால்நாங்குப்பம், 8.வெங்காயப்பள்ளி ஆகிய 8 ஊராட்சிகள்.

**திருப்பத்தூர் மேற்கு ஒன்றியம் :** 1. புதூர்நாடு, 2. அகரம், 3.கதிரம்பட்டி, 4. செலந்தம்பள்ளி, 5. டி.கிருஷ்ணாபுரம், 6.மாடப்பள்ளி, 7. புதுக்கோட்டை, 8. நெல்லிவாசல்நாடு, 9.புங்கம்பட்டுநாடு, 10. சின்னசமுத்திரம், 11. குரும்பகேரி ஆகிய 11 ஊராட்சிகள்.

**திருப்பத்தூர் தெற்கு ஒன்றியம் :** 1. ஜம்மணபுதூர், 2. மோட்டூர்.ஏ.கே., 3. திம்மணாமுத்தூர், 4. பொம்மிகுப்பம், 5.தாதனவலசை, 6.காக்கணாம்பாளையம், 7. கொடுமாம்பள்ளி, 8. அனேரி, 9.இராச்சமங்கலம், 10. சௌடேகுப்பம் ஆகிய 10 ஊராட்சிகள்.

**கந்திலி தெற்கு ஒன்றியம்:** 1. சின்னகந்திலி, 2. கெஜல்நாயக்கன்பட்டி, 3. கந்திலி, 4. மண்டலநாயனகுண்டா, 5. பெரியகரம், 6. தோக்கியம் ஆகிய 6 ஊராட்சிகள்.

### ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **ஆலங்காயம் கிழக்கு, ஆலங்காயம் மத்திய, ஆலங்காயம் மேற்கு – திருப்பத்தூர் கிழக்கு, திருப்பத்தூர் வடக்கு, திருப்பத்தூர் மேற்கு, திருப்பத்தூர் தெற்கு, கந்திலி தெற்கு** ஆகிய ஒன்றியங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**ஆலங்காயம் கிழக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **எஸ். தாமோதரன்,** திருப்பத்தூர் மாவட்டம்.
**ஆலங்காயம் மத்திய ஒன்றியம்:** பொறுப்பாளர் : **வி.ஜி. அன்பு,** திருப்பத்தூர் மாவட்டம்.
**ஆலங்காயம் மேற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **வி. ஞானவேலன்,** திருப்பத்தூர் மாவட்டம்.
**திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **கே.ஆர். திருப்பதி,** திருப்பத்தூர் மாவட்டம்.
**திருப்பத்தூர் வடக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **ஏ.சி. சுரேஷ்குமார்,** திருப்பத்தூர் மாவட்டம்.
**திருப்பத்தூர் மேற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **ஏ. நல்லதம்பி**, திருப்பத்தூர் மாவட்டம்.
**திருப்பத்தூர் தெற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **எம்.இராஜேந்திரன்**, திருப்பத்தூர் மாவட்டம்.
**கந்திலி தெற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **எஸ்.கே.டி. அசோக்குமார்**, திருப்பத்தூர் மாவட்டம்.

**வாணியம்பாடி கிழக்கு நகரம் :** 1, 2, 3, 4, 5, 6, 10, 11, 12, 13, 14, 15, 16, 30, 31, 32, 33, 34, 35, 36 ஆகிய 20 வார்டுகள்.

**வாணியம்பாடி மேற்கு நகரம் :** 7, 8, 9, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29 ஆகிய 16 வார்டுகள்.

**ஆம்பூர் மேற்கு நகரம் :** 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18 ஆகிய 18 வார்டுகள்.

**ஆம்பூர் கிழக்கு நகரம்** : 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36 ஆகிய 18 வார்டுகள்.

### நகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **வாணியம்பாடி கிழக்கு, வாணியம்பாடி மேற்கு, ஆம்பூர் மேற்கு, ஆம்பூர் கிழக்கு** ஆகிய நகரங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, நகரக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**வாணியம்பாடி கிழக்கு நகரம்:** பொறுப்பாளர் : **வி.எஸ்.சாரதி,** வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்.
**வாணியம்பாடி மேற்கு நகரம்:** பொறுப்பாளர் : **கயாஸ் அகமது,** வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்.
**ஆம்பூர் மேற்கு நகரம்:** பொறுப்பாளர் : **எம்.ஆர். ஆறுமுகம்,** ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம்.
**ஆம்பூர் கிழக்கு நகரம்:** பொறுப்பாளர் : **சபீர் அகமது,** ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 15.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.





கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் சார்பில் மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன், பீளமேடு பகுதி2 செயலாளர் மா.நாகராஜ், வட்டக் கழகச் செயலாளர் ப.மோகன்ராஜ் முன்னிலையில் தலைமை செயற்குழு உறுப்பினர் வே.பாலசுப்பிரமணியம் வரவேற்புரையில் நடைபெற்ற ”நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு! கழக சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர், திண்டுக்கல் ஐ.லியோனி, மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி, கழக சட்டத்துறை இணைச்செயலாளர் வழக்கறிஞர் பி.ஆர்.அருள்மொழி, தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மறை, தொழிலாளர் அணி துணைச் செயலாளர் தமிழ்செல்வன், மாணவர் அணி துணைச் செயலாளர் வி.ஜி.கோகுல், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டிஎஸ்பி. கண்ணப்பன், பி.ஆனந்தகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா. மணிகண்டன், மு.மா.ச.முருகன், ஆடிட்டர் வெ.சசிகுமார், ச.கார்த்திகேயன், ச.குப்புசாமி, பகுதிக் கழகச் செயலாளர்கள் இரா.சேரலாதன், ஆர்.எம்.சேதுராமன், கோவை லோகு, வ.ம.சண்முகசுந்தரம், மார்க்கெட் எம்.மனோகரன், வி.ஐ.பதுருதீன், மாநகராட்சி கிழக்கு மண்டலத் தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், நிலைக் குழுத் தலைவர்கள் பெ.மாரிச்செல்வன், சாந்தி முருகன், வி.பி.முபசீரா உள்பட சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.